# தேனிச்சம்பா.. வருமானத்துல சீனிச்சம்பா..



தேனிச் சம்பாவை 30 வருஷமா விடாமப் பயிர் பண்ணிக்கிட்டிருக்கேன் என்றார் ஈரோடு மாவட்டம், தாராபுரம் பகுதியைச் சேர்ந்த செல்லக்குமாரபாளையம் விவசாயி தங்கமுத்து.குவியலாகக் கிடந்த மிளகாய்ப் பழங்களை பிரித்தபடியே பேசத் தொடங்கினார் தங்கமுத்து (அலைபேசி : 90475 72404) “குண்டு மிளகாய், குடை மிளகாய், உருண்டை, குட்டச்சம்பா, பெரியச் சம்பான்ன பல இரக மிளகாய் இருக்கு. எங்க மண்ணுக்கும், தண்ணிக்கும் மிதமான சீதோஷணத்துக்கும் தேனிச் சம்பா நல்லபடியாகவே கை கொடுக்குது. இந்தப் பகுதியில் மட்டும் 2,000 ஏக்கருக்கு மேல் தேனிச் சம்பா காய்ச்சிக் கிடக்கு.

“வைகாசிப் பட்டத்துல தான் தேனிச் சம்பா நல்லா வரும். ஒரு ஏக்கர்ல நடவு செய்றதுக்கு, நாலு பாத்தி நாத்து தேவைப்படும். வெளியில வாங்கினா 900 ரூபாய் ஆகும். பழுத்ததும் பறிச்சி வெயில்ல காய வெப்போம்.‘மொறுமொறு’ன்னு காய்ஞ்சதும் ரெண்டா கிள்ளினா விதைங்க ‘பொலபொல’ன்னு விழும். அப்படியே அள்ளி நாத்தாங்கால் பாத்தியில விதைச்சி, குச்சியை வெச்சி குறுக்கு நெடுக்கா கீறி விட்டா போதும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படும். வடிகால் வசதி இருக்கிற இடத்துல பாத்தி அமைக்கணும். விதைக்கறதுக்கு முன்ன பாத்திக்கு பத்து கிலோ அடியுரம் இறைத்து விடுகிறது நல்லது. மூணு நாளுக்கு ஒரு தண்ணி, இடையில் ஒரு கைக் களை மட்டும் போதும், 60 நாள்ல மிளகாய் நாத்து மிடுக்குக் காட்டி நிக்கும்.கோழி எரு ஒரு டிராக்டர் கொட்டி, ரெண்டு உழவு பிடிச்சி, பத்து ஆட்கள விட்டுப் பார் வாய்க்கால் அமைச்சி, நிறையத் தண்ணி விட்டு, அது கண்டுனதும் ஒன்றரை அடிக்கு, ஒன்றரை அடி இடைவெளியில் செடிகளை நடணும்.

வைகாசி முதல் வாரத்துல நடவை முடிச்சிடணும். முதல் 75 நாளுக்குள்ள மூணு தடவை களை எடுக்கலாம். 75 நாளிலேயே காய் பறிப்புக்கு வந்துடும். தொடர்ந்து 120 நாளைக்கு காய்ப்பு கங்கணம் கட்டி நிக்கும். தேனிச் சம்பாவோட வயசு மொத்தம் 195 நாள். இதுல 120 நாளுக்கு மகசூல் கிடைக்கும். 20 நாளுக்கு ஒரு தடவைன்னு சுழற்சி முறையில ஆறு தடவை அறுவடை செய்யலாம். 5 முதல் 8 டன் வரைக்கும் மகசூல் கிடைக்கும்.பத்தாவது நாள், ரெண்டு மூட்டை டிஏபி உரத்தை அடியுரமா கொடுக்கணும். இருபதிலிருந்து முப்பது நாளுக்குள்ள ரெண்டு மூட்டை யூரியாவை செடிக்குச் செடி வெச்சித் தண்ணி பாய்ச்சணும். அதிலிருந்து இருபது நாள் இடைவெளியில 17:17:17 கலப்பு உரம் ஒரு தடவைக்கு இரண்டு மூட்டை வீதம் முணு முறை கொடுக்கணும்.இலை முரணை, வெள்ளைப் பேன் இதெல்லாம் செடிகளைத் தாக்கும்.

இதுக்கு டைமெத்தேயேட் 500 மில்லியை 120 லிட்டர் தண்ணியிலக் கலந்து தெளிச்சாப் போதும் “பறிச்ச மிளகாயை ஒட்டன்சத்திரம் சந்தைக்குத் தான் அனுப்புறோம். இப்போதைக்கு கிலோ 8 ரூபாயில் இருந்து 10

ரூபாய் வரைக்கும் விலை கிடைக்குது கிணத்துல மட்டும் போதுமான தண்ணி இருந்தா போதும். தேனிச் சம்பா எங்களுக்கு சீனிச் சம்பாவா இனிக்கிற வெள்ளாமை தான்" (தொலைபேசி : 04258-243409).

**ஒரு ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்ய செலவு - வரவு கணக்கு (தங்கமுத்து)**

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| உழவு | 600 | |
| கோழி எரு 1 லோடு | 3,000 | |
| இறைப்புக்கூலி | 300 | |
| பாத்தி | 500 | |
| விதை மற்றும் நாற்றாங்கால் | 1,200 | |
| நடவு | 400 | |
| களை | 1,200 | |
| உரம் | 4,000 | |
| பூச்சிமருந்து | 1,500 | |
| பறிப்புக்கூலி (160 ஆள், ரூ. 80 வீதம்) | 12,800 | |
| வேன் வாடகை (கிலோவுக்கு 60 பைசா) | 4,800 | |
| சந்தைக் கமிஷன் | 10,000 | |
| தண்ணீர்ப் பாய்ச்சுதல் | 4,000 | |
| மகசூல் 8 டன் ரூ. 10 வீதம் | | 80,000 |
| மொத்தம் | 44,300 | 80,000 |
| வருமானம் | | 35,700 |

"இந்தப் பகுதியில் உவர் தண்ணிதான் கிடைக்கும். அதை வெச்சு புகையிலை, பருத்தி சோளம்ன்னு வெள்ளாமை வெச்சோம். இந்த சமயத்துல தான் தேனீச் சம்பா இங்க அறிமுகமாச்சி. அதனால ஒவ்வொரு விவசாயித் தோட்டத்துலயும் முப்பது செம்மறி ஆடுகளுக்கு குறையாம இருக்கும். வெள்ளாமை முடிஞ்ச பிறகு, நாலஞ்சு மாசம் இந்த ஆடுகளை வெச்சிப் பட்டி போடுறோம். அதனால, ஏகத்துக்கும் சொட்டை இல்லாம ஆட்டு எரு நிலத்துல விழும். அப்புறம் நல்லா உழவு பிடிச்சி, அந்த நிலத்துல மிளகாய் நட்டு வெச்சாப் போதும். செடிகளுக்கு எதிர்ப்புச் சக்தியும் கூடும். யூரியா போடுறத கொஞ்சம் கொஞ்சமா குறைச்சிக் கிட்டே வர்றேன். பூச்சி மருந்து தெளிக்கிற வேலையெல்லாம் எப்பவுமே கிடையாது. 8 டன் வரைக்கும் மகசூல் எடுக்கிறேன். பருவ நிலை மட்டும் கைவிடாம இருந்தாலே போதுமானது. ராகி, சோளம், புகையிலை தான் அதிகமா விதைப்பாங்க. வீட்டுச் செலவுக்காக புறக்கடையில காய்கறி போடுறப்ப, அதுல மிளகாய் செடியும் இருக்கும். தேனி விவசாயிக்கு கொடுத்த சீதனம் தான் இந்த மிளகாய் அதனாலயே 'தேனிச் சம்பா'ங்கிற பேரு நிலைத்திருக்கிறது.